## January 2, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. தைவானை சீனாவுடன் இணைப்பது 'தடுத்து நிறுத்த முடியாத வரலாற்று செயல்முறை' என்று சீன அதிபர் ஷி ஜின்பிங் தெரிவித்தார்.

(i) தைவானை சீனா தனது பகுதி என்று கருதுகிறது. தேவைப்பட்டால் ராணுவ பலத்தைப் பயன்படுத்திக்கூட அந்தத் தீவை தங்களுடன் இணைக்கும் உரிமை தங்களுக்கு உண்டு என்று சீனா தொடர்ந்து கூறி வருகிறது.

(ii) தைவான் அதிபர் லாய் சிங்- டே, சீனாவின் அழுத்தங்களை எதிர்கொண்டு தைவானின் இறையாண்மையைப் பாதுகாப்போம் என்று கூறிவருகிறார்.

(iii) தைவானுக்கு அமெரிக்கா ஆயுதங்களை விற்பனை செய்வதுடன் பாதுகாப்பு உத்தரவாதமும் அளித்துள்ளது.

2. அமெரிக்காவின் மிகப் பெரிய நகரமான நியூயார்க்கின் 112-ஆவது மேயராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஸோரான் மம்தானி பதவியேற்றார்.

(i) புது ஆண்டு தொடங்கிய சில நிமிஷங்களில் நகரின் பழைய சிட்டி ஹால் சப்வே நிலையத்தில் நடந்த விழாவில் அவர் திருக் குர்ஆன் மீது சத்தியம் செய்து பதவி யேற்றுக்கொண்டார்.

(ii) நியூயார்க் மாகாண அட்டர்னி ஜெனரல் லெடிஷியா ஜேம்ஸ் அவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

(iii) இதன்மூலம் நியூயார்க் நகரை ஆளும் முதல் தெற்காசிய வம்சாவளியினர் மற்றும் முஸ்லிம் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார்.

3. ஜப்பானின் வடகிழக்கு கடற்கரைப் பகுதியில் அதிகாலை சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

(i)அந்த மாகாணத்தின் ஸமியாகோ நகருக்கு அருகே கடல் பகுதியில் மையம்கொண்டிருந்த அந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.0 அலகுகளாகப் பதிவானது என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

(ii) புவித் தகடுகள் ஒன்றுடன் ஒன்று உராயும்,' பசிபிக் நெருப்பு வளையம்' என்றழைக்கப்படும் பகுதியில் ஜப்பான் அமைந்துள்ளதால் அங்கு நிலநடுக்கங்கள் அடிக்கடி ஏற்படுகின்றன.

4. இந்தியாவின் பிராட்பேண்ட் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை 2025 நவம்பரில் 100 கோடியைக் கடந்துள்ளது. இது குறித்து தொலைத் தொடர்பு ஒழுங்காற்று அமைப்பான ட்ராய் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

(i) 2025 நவம்பரில் நாட்டின் பிராட்பேண்ட் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை 100 கோடியைக் கடந்துள்ளது.

(ii) முந்தைய அக்டோபர் மாதம் இந்த எண்ணிக்கை 99.98 கோடியாக இருந்தது. இதில் வயர்லெஸ் பிரிவு வாடிக்கையாளர்கள் 95.49 கோடியாகவும், நிலையான இணைப்பு

வாடிக்கையாளர்கள் 4.48 கோடியாகவும் இருந்தனர்.

(iii) கடந்த அக்டோபரில் ரிலையன்ஸ் ஜியோ 49.49 கோடி வயர்லெஸ் வாடிக்கையாளர்கள் மற்றும் 1.34 கோடி நிலையான பிராட்பேண்ட் வாடிக்கையாளர்களுடன் முதலிடத்தில் இருந்தது.

(iv) அதைத் தொடர்ந்து, பார்தி ஏர்டெல் 30.26 கோடி வயர்லெஸ் மற்றும் 99.1 லட்சம் நிலையான பிராட்பேண்ட் வாடிக்கையாளர்களுடன் இரண்டாவது இடத்தில் இருந்தது. கடந்த 10 ஆண்டுகளில் நாட்டின் பிராட்பேண்ட் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை ஆறு மடங்குக்கு மேல் உயர்ந்துள்ளது.

(v) 2015 நவம்பரில் 13.15 கோடி பிராட்பேண்ட் வாடிக்கையாளர்கள் இருந்தனர். இந்த எண்ணிக்கை 2025 நவம்பரில் 100.37 கோடியாக உயர்ந்துள்ளது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

5. தேசிய விளையாட்டு நிர்வாகச் சட்டத்தின் சில விதிகள் அமலுக்கு வந்ததாக மத்திய விளையாட்டு அமைச்சகம் அறிவித்தது.

(i) நாடாளுமன்றத்தில் நிறைவேறிய பிறகு, கடந்த ஆண்டு ஆகஸ்ட் 18-ஆம் தேதி அறிவிக்கை வெளியிடப்பட்ட இந்த சட்டத்தில், தேசிய விளையாட்டு வாரியம், தேசிய விளையாட்டு தீர்ப்பாயம் ஆகியவற்றை அமைப்பது தொடர்பான சட்ட விதிகள் அமலுக்கு வருவதாக அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

(ii) அத்துடன், தேசிய விளையாட்டு சம்மேளனங்கள், தேசிய ஒலிம்பிக் கமிட்டி, தேசிய பாராலிம்பிக் கமிட்டி, மாநில சங்கங்கள் உள்ளிட்டவை தொடர்பான விதிகளும் அமலுக்கு வந்துள்ளன.

(iii) இதன்படி, அந்த அமைப்புகளுக்கான தேர்தலுக்குப் பிறகு, அவற்றில் அதிகபட்சம் 15 உறுப்பினர்கள் அடங்கிய நிர்வாகக் குழு இருக்க வேண்டும். அதில் குறைந்தபட்சம், விளையாட்டுத்துறை அனுபவம் கொண்ட இருவர் அங்கம் வகிக்க வேண்டும்.

(iv) இந்திய விளையாட்டுத் துறையின் நிர்வாகத்தை மேம்படுத்தும் வகையில் இந்தப் புதிய சட்ட விதிகளானது, படிப்படியாக அமல்படுத்தப்படும் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது.

(v) அதை சுமுகமாக்கும் வகையில், அடுத்த சில மாதங்களில் தேர்தல்களை சந்திக்க இருக்கும் சங்கங்கள் மற்றும் சம்மேளனங்கள், அவற்றை டிசம்பர் வரை ஒத்திவைத்துக்கொள்ள மத்திய விளையாட்டு அமைச்சகம் அனுமதி அளித்துள்ளது.

(vi) தேசிய விளையாட்டு வாரியம், தேசிய விளையாட்டு தீர்ப்பாயம், தேசிய விளையாட்டு தேர்தல் குழு ஆகியவற்றை அமைப்பது, இந்தப் புதிய தேசிய விளையாட்டு நிர்வாகச் சட்டத்தின் முக்கிய அம்சமாகும்.

(vii) தேசிய விளையாட்டு சங்கங்கள், சம்மேளனங்கள் முறையாக இயங்குவதற்கான விதிகளை வகுப்பது, மத்திய அரசின் நிதியுதவியை பெறும் வகையில் அவற்றுக்கான அங்கீகாரம் வழங்குவது, தேசிய விளையாட்டு

வாரியத்தின் பணியாக இருக்கும். இந்த வாரியம் ஒரு தலைவர், 2 உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கும்.

(viii) சம்மேளனங்கள் முதல் போட்டியாளர்கள் வரை விளையாட்டுத் துறை சார்ந்த அனைத்துத் தரப்பினருக்கு இடையே ஏற்படும் சச்சரவுகளுக்கும், போட்டியாளர் தேர்வு முதல் தேர்தல் விவகாரங்கள் வரை அனைத்திலும் உரிய தீர்வு வழங்கும் அமைப்பாக தேசிய விளையாட்டுதீர்ப்பாயம் இருக்கும்.

(ix) தேசிய விளையாட்டுகள் சம்மேளனங்களின் தேர்தல்களை நடத்தும் பொறுப்பை, தேசிய விளையாட்டுத் தேர்தல் குழு கொண்டிருக்கும். இதில் குறைந்தபட்சம் 20 உறுப்பினர்கள் எப்போதும் இருப்பர்.

6. இந்தியாவில் கடந்த ஆண்டு (2025) மொத்தம் 166 புலிகள் உயிரிழந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

(i) இது தொடர்பாக தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம் வெளியிட்ட தகவலின்படி இந்தியாவில் கடந்த ஆண்டு 166 புலிகள் உயிரிழந்தன. இது அதற்கு முந்தைய ஆண்டில் புலிகள் இறப்பு எண்ணிக்கையை விட 40 கூடுதலாகும். புலிகள் இறப்புக்கு பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன.

(ii) நாட்டிலேயே 'புலி மாநிலம்' என்று அழைக்கப்படும் மத்திய பிரதேசத்தில் கடந்த ஆண்டு அதிக அளவாக 55 புலிகள் இறந்தன அந்தமாநிலத்தைத் தொடர்ந்து மகாராஷ்டிரம். கேரளம், அஸ்ஸாம் ஆகியவற்றில் முறையே 38, 13, 12 புலிகள் உயிரிழந்தன. கடந்த ஆண்டு உயிரிழந்த 166 புலிகளில் 31 குட்டிகளும் அடங்கும்.

(iii) இது தொடர்பாக வன உயிரின நிபுணர் ஜெய்ராம் சுக்லா கூறுகையில் 'நாட்டில் புலிகள் உயிரிழப்பதற்கான முக்கிய காரணமாக புலிகளுக்கு இடையே ஏற்படும் மோதல் உள்ளது. புலிகள் தங்கள் ஆதிக்க எல்லையை நிலைநாட்டுவதில் பிரச்னைகளை சந்திக்கின்றன. மத்திய பிரதேசத்தில் கடந்த 2014ஆம் ஆண்டில் இருந்து புலிகள் எண்ணிக்கை 60 சதவீதம் உயர்ந்துள்ளது. இது முன்னெப்போதும் இல்லாத வளர்ச் சியாகும்' என்று தெரிவித்தார்.

(iv) கடந்த 2023ஆம் ஆண்டு சர்வதேச புலிகள் தினத்தையொட்டி வெளியிடப்பட்ட தகவலின்படி இந்தியாவில் 2018இல் 2,967ஆக இருந்த புலிகளின் எண்ணிக்கை 2022இல் 3,682 ஆக உயர்ந்தது. ஆண்டுக்கணக்கில் பார்க்கும்போது இது 6 சதவீத வளர்ச்சியாகும். உலக அளவில் புலிகளின் மக்கள்தொகையில் 75 சதவீதம் அளவுக்கு இந்தியாவில் உள்ளன.

7. நாட்டின் புதிய உள்நாட்டு வான் பாதுகாப்பு அமைப்பான 'சுதர்சன சக்கரம்' உருவாக்கத்தில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ) மிக முக்கியப் பங்காற்றும் என்று மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

(i) நாட்டின் வான்பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கில், 'சுதர்சன சக்கரம்' திட்டத்தை பிரதமர் நரேந் திர மோடி கடந்த ஆண்டு சுதந்திர தின உரையின்போது அறிவித்தார். இது இஸ்ரேலின் 'அயர்ன் டோம்' போன்ற ஒரு பலஅடுக்கு வான்பாதுகாப்பு அமைப்பாகும். இதில் செயற்கைக்கோள் கண்காணிப்பு, ஏவுகணை இடைமறிப்பு மற்றும் லேசர் அடிப்படையிலான ஆயுதங்கள்

ஒருங்கிணைக்கப்படும்.

(ii) இந்நிலையில், டிஆர்டிஓ அமைப்பின் 68-ஆவது நிறுவன தினத்தை முன்னிட்டு, தில்லியில் உள்ள அதன் தலைமையகத்தை அமைச்சர் ராஜ்நாத் சிங் பார்வையிட்டார்.

(iii) டிஆர்டிஓ தலைவர் - சமீர் வி.காமத்

8. மேற்கு வங்க மாநிலம் ஹௌராவில் உள்ள தட்சிணேஷ்வர் காளி கோயிலில் கல்பதரு விழா நடைபெறது.

9. முப்பது ஆண்டுகளுக்கும் மேல் தொடரும் நடைமுறையின்படி, இந்தியாவும் பாகிஸ்தானும் தங்களின் அணுமின் உற்பத்தி நிலையங்கள் குறித்த பட்டியலை பகிர்ந்து கொண்டன.

(i) இரு நாட்டுத் தலைநகரங்களான தில்லி மற்றும் இஸ்லாமாபாதில் உள்ள தூதரகங்கள் வாயிலாக இந்தப் பட்டியல் ஒரே நேரத்தில் வழங்கப்பட்டது. இந்த நடைமுறை தொடர்ந்து 35-ஆவது ஆண்டாக தடையின்றி நடைபெற்றுள்ளது.

(ii) இதற்காக இந்தியா-பாகிஸ்தான் இடையே கடந்த 1988, டிச.31-ஆம் தேதி கையொப்பமான இருதரப்பு ஒப்பந்தம், 1991, ஜனவரியில் நடை முறைக்கு வந்தது.

(iii) இந்த ஒப்பந்தத்தின்படி, ஒவ்வொரு புத்தாண்டு தினத்திலும் இரு நாடுகளும் தங்களின் கட்டுப்பாட்டில் உள்ள அணுமின் உற்பத்தி நிலையங்களின் விவரங்களை ஒருவருக்கொருவர் தெரிவிப்பது கட்டாயமாகும்.

(iv) இதையடுத்து, முதல் முறையாக 1992-ஆம் ஆண்டு ஜன. 1-ஆம் தேதி இந்தப் பட்டியல் பரிமாறப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(v) இந்தியா- பாகிஸ்தான் இடையே கடந்த 2008-ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மற்றொரு ஒப்பந்தத்தின்படி, ஆண்டுதோறும் ஜனவரி 1 மற்றும் ஜூலை 1 ஆகிய தேதிகளில் இரு நாடுகளும் தங்கள் வசமுள்ள பரஸ்பர நாட்டைச் சேர்ந்த கைதிகளின் பெயர் பட்டியலைப் பரிமாறிக் கொள்வது வழக்கம்.

10. சமூக ஊடகங்களில் பயங்கரவாத கருத்துகளைப் பதிவு செய்யும் இளைஞர்களுக்கு தமிழக தீவிரவாத தடுப்புப் படையினர் மனநல ஆலோசனை (கவுன்சலிங்) வழங்கி வருகின்றனர்.

(i) இந்தியாவில் மொத்த மக்கள் தொகையில் 112 கோடி பேரிடம் கைப்பேசிகள் உள்ளன. இதில் 80.6 கோடி பேர் கைப்பேசி வழியாக இன்டர்நெட் சேவைகளை பல்வேறு தேவைக்காகப் பயன்படுத்துகின்றனர். 67.6 கோடி பேர் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதாக ஒரு தரவு கூறுகிறது. இந்த எண்ணிக்கை, நாட்டின் மொத்த மக்கள்தொகையில் 71 சதவீதமாகும். இவர்களில் 49.7 கோடி பேர் சமூக ஊடகங்களை தீவிரமாகப் பயன்படுத்துபவர்கள். இது மொத்த மக்கள்தொகையில் 33.7 சதவீதமாகும்.

(ii) சமூக ஊடக தகவல் பரிமாற்றத் தளங்களில் இளைஞர்கள் பெரிதும் பயன்படுத்தும் 'வாட்ஸ்ஆப்' செயலியை 41 கோடி பேரும், 'யூ-டியூப்' காணொலித்

தளத்தை 30 கோடி பேரும், 'இன்ஸ்டாகிராம்' தளத்தை 28 கோடி பேரும் பயன்படுத்துவதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

(iii) சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை தேசிய சராசரியைவிட தமிழகத்தில் அதிகம் என்று ஆய்வுகள் கூறுகின்றன. ஒரு நாளைக்கு சரா சரியாக 2 மணி நேரம் 36 நிமிஷ நேரத்தை இந்தியர்கள் சமூக ஊடகங்களில் செலவிடுவதாக ஓர் அறிக்கை கூறுகிறது. இது உலக சராசரியான 2 மணி நேரம் 23 நிமி ஷத்தைவிட அதிகமாகும்.

(iv) இதனால் சமூக ஊடகங்களில் பகிரப்படும் எந்தவொரும் தகவலும் பெரும் தாக்கத்தையும், அதிர்வலையையும் ஏற்படுத்துகின்றன. சமூக ஊடகங்கள் தகவல் தொடர்புக்கும், தகவல் பரிமாற்றத்துக்கும், அறிவுசார் பயன்பாட்டுக்கும் மட்டுமல்லாமல் பொழுதுபோக்குக்காகவும் மாறி வெகு நாள்களாகின்றன.

(v) தடம் மாறும் இளைஞர்கள்: சமூக ஊடகங்களால் எந்த அளவுக்கு நன்மையும், பயனும் கிடைக்கின்றனவோ அதே அளவுக்கு தீமையும் நிறைந்துள்ளது. இதில் முக்கியமானது, சமூக ஊடகங்கள் வாயிலாக பயங்கரவாத இயக்கத்தினர், இளைஞர்களை மூளைச்சலவை செய்து தங்கள் பக்கம் ஈர்க்கப் பயன்படுத்தும் போக்காகும். இதைத் தடுக்க ஏதுவாக சந்தேகத்துக்கு இடமான சமூக ஊடக கணக்குகளின் செயல்பாடுகளை தமிழக காவல் துறை கண்காணித்து வருகிறது. தமிழகத்தில் சமீபத்திய ஆண்டுகளாக பயங்கரவாத அமைப்புடன் தொடர்பில் இருந்ததாக கைது செய்யப்பட்ட பலரும், பயங்கரவாத அமைப்பினருடன் தொடர்பில் இருக்க பாலமாக இருந்தவை சமூக ஊடகத் தளங்கள் என்கின்றனர் காவல் துறையினர். உச்சபட்சமாக சில இளைஞர்கள் சமூக ஊடகங்கள் மூலமாகவே பயங்கரவாத இயக்கங்களில் தொடர்புகொண்டு அவற்றில் தங்களை இணைத்துக் கொண்ட சம்பவங்களும் நடந்துள்ளன.

(vi) சமூக ஊடகங்களில் வெறுப்புக் கருத்துகளையும், நாட்டின் ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மைக்கு எதிராகவும், ஒரு சமூகத்துக்கு எதிராகவும், பயங்கரவாத இயக்கங்களுக்கு ஆதரவாகவும் கருத்துகளைப் பதிவு செய்வோரை தமிழக காவல் துறையின் சமூக ஊடக கண்காணிப்புப் பிரிவும், தீவிரவாத தடுப்புப் படையினரும் தீவிரமாகக் கண்காணித்து வருகின்றனர்.

11. சிந்து நதிநீர் ஒப்பந்தத்தின் கீழ், அந்த நதிப் படுகையின் மேற்கில் உள்ள நதிகளின் நீரை தவறாகப் பயன்படுத்த இந்தியாவுக்கு அனுமதியில்லை என்று பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

(i) கடந்த 1960-ஆம் ஆண்டு உலக வங்கியின் மத்தியஸ்தத்தால், இந்தியா-பாகிஸ்தான் இடையே சிந்து நதிநீர் ஒப்பந்தம் கையொப்பமானது. சிந்து நதிப் படுகையின் கிழக்கில் உள்ள ராவி, பியாஸ், சட்லஜ் நதிகளின் நீரை இந்தியாவும், மேற்கில் உள்ள சிந்து, ஜீலம், செனாப் நதிகளின் நீரை பாகிஸ்தானும் பகிர்ந்துகொள்ள இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

(ii) கடந்த ஆண்டு ஏப்ரலில் ஜம்மு-காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, அந்தத் தாக்குதலின் பின்னணியில் பாகிஸ்தான் இருந்ததாக குற்றஞ்சாட்டிய இந்தியஅரசு, சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை நிறுத்திவைத்தது.

(iii) காஷ்மீரில் இந்நிலையில், பாயும் செனாப் நதியில் 260 மெகாவாட் துல்ஹஸ்தி இரண் டாம் கட்ட நீர்மின் உற்பத்தித் திட்டத்துக்கு அண்மையில் இந்தியா ஒப்புதல் அளித்தது.

(iv) இதுதொடர்பாக பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் தாஹீர் ஹுசேன் அந்தரபி செய்தியாளர்களிடம் கூறியதாவது: சிந்து நதிநீர் ஒப்பந்தத்தின் கீழ், அந்த நதிப் படுகையின் மேற்கில் உள்ள நதிகளின் நீரைப் பயன்படுத்துவதில் இந்தியாவுக்கு வரம்பு விதிக்கப்பட்டுள்ளது. அந்த நீரை தவறாகப் பயன்படுத்த இந்தியாவுக்கு அனுமதியில்லை.

(v) மேற்கில் உள்ள நதிகளில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் குறித்த தகவல்களை பாகிஸ்தானிடம் இந்தியா பகிர்ந்துகொள்ள வேண்டும். ஆனால் செனாப் நதியில் துல்ஹஸ்தி இரண்டாம் கட்ட நீர்மின் உற்பத்தித் திட்டம் குறித்த தகவலை பாகிஸ்தானிடம் இந்தியா பகிர்ந்துகொள்ளவில்லை. அந்தத் தகவலை இந்தியாவிடம் பாகிஸ்தான் கோரியுள்ளது. தனது தண்ணீர் உரிமைகளில் பாகிஸ்தான் சமரசம் செய்துகொள்ளாது என்று தெரிவித்தார்.

(vi) இந்தியா-வங்கதேச கங்கை நதிநீர் பங்கீடு ஒப்பந்தம்: நீர் அளவீடு தொடக்கம் கடந்த 1996-ஆம் ஆண்டு இந்தியா-வங்கதேசம் இடையே கங்கை நதிநீர் பங்கீடு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. மேற்கு வங்கத்தில் பாயும் கங்கை நதியில் கட்டப்பட்டுள்ள ஃபரக்கா குறுக்கணையைச் சுற்றியுள்ள நீரை வறண்ட காலங்களில் பகிர்ந்து கொள்ளும் நோக்கில், 30 ஆண்டு காலத்துக்கான இந்த ஒப்பந்தம் கையொப்பமானது. இந்த ஒப்பந்தம் நிகழாண்டு டிசம்பரில் காலாவதியாக உள்ள நிலையில்,அதைப் புதுப்பிப்பதற்கான ஆலோசனைகளை இருநாடுகளும் தொடங்கியுள்ளன.

(vii) இந்நிலையில், நீர் பங்கீடு தொடர்பாக வங்கதேசத்தில் ஹர்டிங் பாலம் கட்டப்பட்டுள்ள பத்மா நதியிலும் (கங்கை நதியின் பிரதான கிளை நதி), ஃ பரக்கா குறுக்கணை பகுதியிலும் கூட்டாக நீர் அளவீடு பணிகளை இந்தியாவும் வங்கதேசமும் தொடங்கின. இதற்காக இந்தியாவின் மத்திய நீர் ஆணைய இயக்குநர் சௌரப் குமார், அந்த ஆணையத்தின் உதவி இயக்குநர் சன்னி அரோரா ஆகியோர் வங்கதேசம் சென்றுள்ளனர். வங்கதேச தண்ணீர் மேம்பாட்டு வாரிய செயற் பொறியாளர் ஆரிஃபின் சுபைத் தலைமையில் 4 பேர் கொண்ட குழு இந்தியா வந்துள்ளது என்று வங்கதேச ஊடகத்தில் தெரிவிக்கப்பட்டது.